4. அறிவிப்புகள்.

ஆ. கூடுதல் மானியக் கோரிக்கைகள்—1980–81 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1980–81 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக் கான கோரிக்கைகளைப் பேரவையில் மொழிவது குறித்து, ஆளு நரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றிருக்கிறது :

In pursu nce of Article 203, Cl use (3) of the Constitution of India, I, S d q Ali, Governor of T mil N du, hereby give my recommend tion to the moving in the T mil N du Leg slative Assembly of the D m nds for further gr n s for the year 1980-81.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டப் பேரவை
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

5. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, தங்களிடத்தில் நான் அண்ணா பத்திரிக்கை மீது உரிமைப் பிரச்னை அறிவிக்கை கொடுத்து நெடு நட்களாகி விட்டது. போன தொடர் கூட்டத் திலேயே அதைக் கொடுத்தேன். அது என்ன வருமா, வராதா? (குறுக்கீடு) நான் இங்கேயும் கேட்கிறேன், அறையிலும் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அது பற்றி கவனித்துச் சொல்கிறேன்.

திருமதி டி. யசோதா: மதுராந்தகம் ஞானசுந்தரி மரணம் பற்றி முன்பே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அதை இன்றைக்கு எடுத்துக் கொள்வதாகப் பேரவைத் தலைவர் கூறினார். ஏன் இன்றே எடுத்துக் கொள்ளவில்லை?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. பதில் வந்த பிறகுதான் எடுத்துக் கொள்ளமுடியும்.

திருமதி டி. யசோதா: அரசு பதில் இல்லையென்றாலும் அது ஒரு சமுதாயத்துப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த முடியாது, உட்காருங்கள். பேரவை விதிமுறைகளையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் (கூச்சல், குழப்பம்).